
உத்திரமேரூர் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படும் தொண்டை நாட்டுப் பிரிவுகளில் ஒன்றாக உள்ளது. கி.மு. நூற்றாண்டுகளில் இப்பகுதி சிற்றரசர்களின் ஆட்சியின் கீழும், வணிகப் பாதைகளின் மையமாகவும் இருந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.



CHENNAI



கு.ராஜவேலு, 'ஆகஸ்ட் 1942' என்ற நாவலை எழுதியவர். இந்திய சுதந்திரப் போரட்டத்தை பின்புலமாகக் கொண்ட இந்நாவல் 'ஆகஸ்ட் புரட்சி' அனுபவங்களின் அடிப்படையில் எழுதப்பட்டது ஆகும்.



ந.சிதம்பர சுப்பிரமணியன், 'மண்ணில் தெரியுது வானம்' என்ற நாவலை எழுதியவர். இந்திய சுதந்திரப் போராட்டத்தைப் பின்புலமாகக் கொண்ட இந்நாவல், தனிமனித வாழ்வில் காந்திய தாக்கத்தை விவரிக்கிறது.



**இந்திய கைவினைப் பொருட்கள் கவுன்சில் சார்பில்**

# சிறந்த கைவினைக் கலைஞர்களுக்கு 'கமலா' விருதுகள்

**ஜவுளி அமைச்சக தென்மண்டல இயக்குநர் வழங்கினார்**

**சென்னை**

இந்திய கைவினைப் பொருட்கள் கவுன்சில் சார்பில் சிறந்த கைவினை கலைஞர்களுக்கு கமலா விருதுகளை மத்திய ஜவுளி அமைச்சக தென்மண்டல இயக்குநர் லட்சுமண் ராவ் அதுகுரி வழங்கினார்.

பாரம்பரிய கைவினை மற்றும் நெசவுத் துறையில் சிறந்த கலைஞர்களை கவுரவிக்கும் வகையில் இந்திய கைவினைப் பொருட்கள் கவுன்சில் சார்பில் ஆண்டுதோறும் கமலா விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்திய சமூக சீர்திருத்தவாதியும், சுதந்திரப் போராட்ட வீராங்கனையுமான கமலாதேவி சட்டோபாத்யாயாவின் நினைவாக கைவினைத்திறன், நெசவு, பாரம்பரிய கலைகளை மீட்டெடுப்பது உள்ளிட்ட பிரிவுகளில் இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன.




இந்திய கைவினைப் பொருட்கள் கவுன்சில் சார்பில் சென்னையில் நேற்று நடைபெற்ற விழாவில் சிறந்த கைவினைக் கலைஞர்களுக்கு மத்திய ஜவுளி அமைச்சகத்தின் தென்மண்டல வளர்ச்சி இயக்குநர் லட்சுமன் ராவ் அதுகுரி 'கமலா' விருதுகளை வழங்கினார். கவுன்சில் தலைவர் விசாலாட்சி ராமசாமி உடனிருந்தார். படம்: எஸ்.சத்தியசீலன்.

அந்த வகையில் 2024-25-ம் ஆண்டுக்கான கமலா விருதுகள் வழங்கும் விழா சென்னை ராஜா அண்ணாமலைபுரம் இமேஜ் மையத்தில் நேற்று நடைபெற்றது. இதில் மத்திய ஜவுளி அமைச்சகத்தின் தென்மண்டல வளர்ச்சி ஆணையர் லட்சுமண் ராவ் அதுகுரி விருதுகளை வழங்கினார். கைவினை பொருள் தயாரிப்பில் வாழ்நாள் சாதனைக்கான கமலா சம்மான் விருது, காஞ்சிபுரத்தை சேர்ந்த பாரம்பரிய பட்டு நெசவாளர் பி.கிருஷ்ணமூர்த்திக்கு வழங்கப்பட்டது. கைவினைத்திறன் பிரிவில் கவாஜா நஸீர் அலி, கே.ஸ்ரீனிவாசராவ், நெசவுபிரிவில் டோர்ன் லக்காபாய் வல்லபாய், சிறந்த பங்களிப்பு பிரிவில் ரஹ்மான் லோன், பாரம்பரிய கலைகள் மீட்டெடுப்பு பிரிவில் குரிந்தர் கவுர் புல்லார், இளம் கலைஞர் பிரிவில் சுமன் ஆகியோரும் கமலா விருதுகளை பெற்றுக் கொண்டனர். இந்த விருது ரூ.25 ஆயிரம் பரிசு, பாராட்டுச் சான்று ஆகியவற்றை உள்ளடக்கியது.

விருதுபெற்ற கலைஞர்கள் தங்கள் கலை அனுபவங்களை பகிர்ந்துகொண்டனர். கடந்த 2025-ம் ஆண்டு பத்மஸ்ரீ விருது பெற்ற சிற்பக்கலைஞர் ராதாகிருஷ்ணன், இந்த ஆண்டு பத்மஸ்ரீ விருது பெற்ற ராஜாஸ் தபதி ஆகியோரும் விழாவில் கவுரவிக்கப்பட்டனர்.

விழாவில் தென்மண்டல இயக்குநர் லட்சுமண் ராவ் அதுகுரி பேசும்போது, "நம்மிடையே திறமைமிக்க கைவினைக் கலைஞர்கள் ஏராளமானோர் உள்ளனர். அவர்களுக்கு நல்ல வழிகாட்டுதல் தேவைப்படுகிறது. மற்ற விருதுகளுக்கும் கைவினைக் கலைஞர்களுக்கு வழங்கப்படும் விருதுக்கும் பெரிய வேறுபாடு உள்ளது. கைவினைக் கலைஞர்களுக்கு விருது வழங்கும்போது குறிப்பிட்ட கலைஞரை மட்டுமின்றி அவர் சார்ந்துள்ள கலையையும் நாம் கவுரவிக்கிறோம். கலைப்பொருட்கள் தயாரிப்புக்கான மூலப்பொருட்களின் விலை உயர்ந்து வருவதுதான் அக்கலைஞர்கள் சந்திக்கும் மிகப் பெரிய சவாலாக உள்ளது. ஜவுளி அமைச்சகம் சார்பிலும் சிறந்த கைவினைக் கலைஞர்களுக்கு ஆண்டுதோறும் மண்டல அளவில் விருதுகள் வழங்கப்படுகின்றன. அந்த விருதுகளுக்கும் விண்ணப்பிக்கலாம்" என்றார்.

முன்னதாக, கவுன்சில் தலைவர் விசாலாட்சி ராமசாமி வரவேற்றுப் பேசினார். கவுன்சில் செயலாளர் மாலதி நன்றி கூறினார். விழாவில், கவுன்சில் மூத்த உறுப்பினர் உஷா கிருஷ்ணா, ரேணு சபாநாயகம் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

CHENNAI



**பொது அறிவு:** பாதரசம் (Hg) சாதாரண அழுத்தத்தில் திரவமாக உள்ளது. இது அதிக அடர்த்தி மற்றும் குறைந்த உருகுநிலை (-38.8oC) கொண்டது. இது வெப்பநிலை மானிகள் (Thermometers) மற்றும் காற்றழுத்தமானிகளில் (Barometers) பயன்படுத்தப்படுகிறது.

**பொன்மொழி:** புலியும் பசுவும் ஒரு துறையில் நீர் அருந்தினாலும் அருந்தும். ஆனால், முதலாளியும் தொழிலாளியும் சரிசமத்துவமாக தங்கள் தேசப் பொருட்களை காந்தியாரின் சுயராஜ்ஜியத்தில் அனுபவிப்பார்கள் என்பது பகற்கனவே. - சிங்காரவேலர்



# 4.1 கோடி சிறார்களுக்கு உடல் பருமன் பாதிப்பு


# உலக அளவில் இந்தியாவுக்கு 3-வது இடம்

**புதுடெல்லி**

உலக அளவில் உடல் பருமனால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் அதிகம் உள்ள நாடுகளில் இந்தியா முதல் மூன்று இடங்களுக்குள் இருப்பதாக அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது. சுமார் 4.1 கோடி சிறுவர்களுக்கு இந்த பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இதுகுறித்து உலக உடல் பருமன் அட்லஸ் 2026 அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாவது: இந்தியாவில் 5 முதல் 19 வயதுக்குட்பட்ட சுமார் 4.1 கோடி சிறுவர்கள் அதிக உடல் எடையுடன் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இதில் 1.4 கோடி பேர் அதீத உடல் பருமன் பாதிப்புடன் இருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சீனா மற்றும் அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக இந்தியாவும் இப்பெரும் பிரச்சினையை எதிர்கொண்டுள்ளது.




இதன் மூலம், இந்தியா ஒரே நேரத்தில் ஊட்டச்சத்துக் குறைபாடு மற்றும் அதிகரித்து வரும் சிறார் உடல் பருமன் பாதிப்பு ஆகிய இருமுனை சவால்களை எதிர்கொண்டு வருகிறது.

கடந்த 1975-ல் 4% ஆக இருந்த சிறார் உடல் பருமன் பிரச்சினை, தற்போது உலக அளவில் 20 சதவீதத்தை நெருங்கியுள்ளது. வரலாற்றிலேயே முதல் முறையாக உலகளவில் உடல் எடை குறைந்த சிறுவர்களை விட, உடல் பருமன் கொண்டவர்களின் எண்ணிக்கை பரவலாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பல நாடுகள் இதைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்தாலும், பாதிப்பின் வேகத்திற்கு ஏற்ப தீர்வுகள் எட்டப்படவில்லை என்பதே நிதர்சனமான உண்மை. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஈரானின் கார்க் தீவை கைப்பற்ற அமெரிக்கா வியூகம்

**மத்திய கிழக்கு பகுதிக்கு புதிதாக 3 போர்க் கப்பல்கள் விரைகின்றன**

வாஷிங்டன்

ஈரானின் கார்க் தீவை கைப்பற்ற அமெரிக்கா திட்டமிட்டு உள்ளது. இதற்காக புதிதாக 3 போர்க்கப்பல்கள் மத்திய கிழக்கு பகுதிக்கு விரைகின்றன.

அமெரிக்கா, இஸ்ரேல் கூட்டுப்படைகள் மற்றும் ஈரான் ராணுவத்துக்கு இடையே கடந்த பிப்ரவரி 28-ம் தேதி முதல் போர் நடைபெற்று வருகிறது. இந்த போர் நேற்று 22-வது நாளாக நீடித்தது. ஈரானின் ராணுவ தளங்கள், அணு சக்தி தளங்கள், எண்ணெய் வயல்கள் என 8,000-க்கும் மேற்பட்ட இடங்களை அமெரிக்கா, இஸ்ரேல் கூட்டுப்படைகள் தரைமட்டமாக்கி உள்ளன.

இதற்கு பதிலடியாக இஸ்ரேல் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள 20 அமெரிக்க ராணுவ தளங்கள் மீது ஈரான் ராணுவம் தொடர்ச்சியாக ஏவுகணை தாக்குதல்களை நடத்தி வருகிறது. ஐக்கிய அரபு அமீரகம், சவுதி, கத்தார் உள்ளிட்ட நாடுகளின்



அமெரிக்க கடற்படையின் யுஎஸ்எஸ் ட்ரிபொலி போர்க்கப்பல்

தீவு அமைந்துள்ளது. ஈரான் முழுவதும் இருந்து குழாய்கள் மூலம் இந்த தீவுக்கு கச்சா எண்ணெய் கொண்டு வரப்படுகிறது. அங்கிருந்து உலகம் முழுவதும் 90% கச்சா எண்ணெய், எல்பிஜி, எல்என்ஜி வாயு ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஈரான் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக கருதப்படும் கார்க் தீவை கைப்பற்ற அதிபர் ட்ரம்ப் திட்டமிட்டுள்ளார். மத்திய கிழக்கு பகுதியில் ஏற்கெனவே 16 போர்க்கப்பல்கள் முகாமிட்டு உள்ள நிலையில் யுஎஸ்எஸ் ட்ரிபொலி, யுஎஸ்எஸ் சான் டியாகோ, யுஎஸ்எஸ். நியூ ஓர்லியன்ஸ் ஆகிய 3 அமெரிக்க போர்க்கப்பல்கள் அங்கு விரைந்துள்ளன. இவற்றில் தலா 2,200 வீரர்கள் உள்ளனர். இந்தக் கப்பலில் அதிநவீன போர் விமானங்கள், ஹெலிகாப்டர்கள் உள்ளன. இதில் உள்ள வீரர்கள் கடல், வான், தரை வழி போரில் திறன் வாய்ந்தவர்கள்.

## 430 கிலோ யுரேனியம்

ஈரானின் நடான்ஸ், போர்டோ அணு சக்தி தளங்களில் சுமார் 430 கிலோ யுரேனியம் இருப்பு உள்ளதாகக் கூறப்படுகிறது. அந்த தளங்களில் 60 சதவீதம் முதல் 80 சதவீதம் வரை யுரேனியத்தை செறிவூட்டியிருப்பதாகக் கூறப்படுகிறது.

90 சதவீதம் அளவுக்கு யுரேனியத்தை செறிவூட்டினால் அணு குண்டுகளை தயாரிக்க முடியும். செறிவூட்டப்பட்ட 42 கிலோ யுரேனியம் மூலம் ஓர் அணு குண்டை தயாரிக்கலாம். அதன்படி 10 அணு குண்டு தயாரிக்கலாம். இதை தடுக்க ஈரானின் அணுசக்தி தளங்களை அழித்து, அந்த 430 கிலோ யுரேனியத்தை பறிமுதல் செய்ய அமெரிக்காவும் இஸ்ரேலும் வியூகம் வகுத்துள்ளன.